**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>**

**<u>அ.வ.எண். 125/2010</u>**

இந்நீதிமன்றத்து பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு ஜுலை மாதம் 28 –** ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி – 28.07.2025**

**பெயர் – கவிதா**

**க/பெ – சண்முகம்**

**சாட்சி – PW1**

**விசாரணை தொடங்கும் நேரம்–** p.m

**<u>4 மற்றும் 5 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. 4 மற்றும் 5 ம் பிரதிவாதிக்களுக்கு எதிராக என்ன பாிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் தந்தையின் சொத்தினை கோரி தாக்கல் செய்துள்ளேன். 4 மற்றும் 5 ம் பிரதிவாதிகள் எந்த ஆவணங்கள் வாயிலாக சொத்தை வாங்கினர், அந்த ஆவணங்கள் இந்த நீதிமனற்தில் தாக்கல் செயய்படப்டுள்ளதா என்றால் வில்லங்கம் மற்றும் இதர ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். எந்த ஆவணமாக இந்நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் எண் எனக்கு நினைவில் இல்லை, ஆனால் தாக்கல் செய்துள்ளேன்.

2. எ அட்டவணை சொத்துக்கள் எந்த வகையான சொத்துக்கள் என்றால் ஞாபகம் இல்லை. பி அட்டவணை சொத்துக்கள் எந்த வகையான சொத்துக்கள் என்றால் ஞாபகம் இல்லை. ஞாபகம் இல்லாத காரணத்தினால் எனக்கு இந்த வழக்கை பற்றி தெரியாது என்றால் சரியல்ல. எத்தனை ஆவணத்தின் அடிப்படையில் பி அட்டவணை சொத்துக்களை 4 மற்றும் 5 ம் பிரதிவாதிகள் கிரையம் பெற்றனர் என்றால் 2 ஆவணங்கள் அடிப்படையில். அந்த 2 ஆவணங்கள் என்ன என்றால் அப்பா வழியல் மற்றும் அண்ணன் வழியில் விற்கப்பட்ட சொத்துக்கள்.

3. அண்ணன் வழியில் விற்கப்பட்ட சொத்து பி அட்டவணையில் ஐடம் எண் 7 மற்றும் 8 சர்வே எண் 59/3, 64/3, இந்த 2 சர்வே எண்களுக்கான எந்த பரிகாரமும் நான் கோரவில்லை என்றால் எனது வழக்கறிஞரிடம் தாக்கல் செய்ய சொல்லி கொடுத்துள்ளேன். எனது அண்ணன் விற்ற சொத்துக்களுக்கான எந்த பரிகாரமும் நான் கோரவில்லை என்றால் எனக்கு அது குறித்து தெரியவில்லை. தற்போது தான் தெரிகிறது. அ அட்டவணை –யில் 4 சொத்துக்கள் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். இந்த சொத்துக்கள் அனைத்தும் எந்த வழியில் எனக்கு வந்தது சேர்ந்தது என்று எனது வழக்குரையிலோ, பிரமாணவாக்குமூலத்திலோ குறிப்பிட்டுள்ளேனா என்றால் பூர்வீக சொத்து என்று குறிப்பிட்டுள்ளேன்.

4. வா.சா.ஆ 1–ல் 1937 ஆம் ஆண்டு கோவூர் கிராமத்தில் துரைசாமி முதலியாரிடமிருந்து சின்னையமுதலியார், சுப்பிரமணியமுதலியார் பெரியபனிச்சேரி கிராமத்தில்1 ஏக்கர் 34 செண்ட் பல்லாவரம் சார்பதிவு அலுவலகத்தில் ஆவண எண் 1237 ஆக பதிவு செய்யப்பட்டது. அதே போன்று சிங்காரமுதலியார் வகையறா என்பவரிடமிருந்து காட்டுப்பாக்கம் கிராமம் சுப்பிரமணியமுதலியார் கிரையம் பெற்று பூந்தமல்லி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண் 730/1923 பதியப்பட்டு மேற்கூறிய 2 சொத்துக்களையும் 01.11.1939 ஆம் தேதி கிராம பஞ்சாயத்தார் முன்னிலையில் தேவராஜ் முதலியார், சின்னையமுதலியார், சுப்பிரமணியமுதலியார் ஆகிய மூவரும் பாகப்பிரிவினை செய்து பாகப்பிரிவினை கூர்சிட்டு எழுதியதில் சுப்பிரமணிய முதலியார்க்கு சி அட்டவணை சொத்து கிடைத்தது என்று வா.சா.ஆ 1 ல் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான்.

5. மேற்சொன்ன சி அட்டவணையின் மூலமாக கிடைக்கப்பெற்ற சொத்துக்கள் கதிர்வேல் முதலியார் வகையறாவிடம் இருந்த பெரியபனிச்சேரி கிராம சர்வே எண் 118/2, 28 செண்ட் நிலத்தை சுப்பிரமணியமுதலியார் கிரையம் பெற்று பூந்தமல்லி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண் 1353/1963 அதேபோல் 1963 ஆம் ஆண்டில் கோபுரசநல்லூர் கிராமத்திலும் ஒரு சொத்தை கிரையம் பெற்று பூந்தமல்லி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண் 2295/1963 பதியப்பெற்றதும். அதேபோன்று யசோதம்மாள் என்பவரிடம் இருந்து காட்டுப்பாக்கம் கிராமத்தில் பூந்தமல்லி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதியப்பட்ட 1811/1972 அதேபோல் 1974 ல் சிவலிங்முதலியார் என்பவரிடமிருந்து கோபரசநல்லூர் கிராமத்தில் 429/1974 ஆவணம்

வழியாக பூந்தமல்லி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதியப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் சுப்பிரமணிய முதலியார் மற்றும் அவரது சகோதரர்கள் ஏககுடும்ப சொத்துக்களை தனித்தனியாக பிரித்து தனித்தனி குடும்பமாக வாழந்து வந்தார்கள் என்றால் சரிதான்.

6. சுப்பிரமணிய முதலியார் இறப்பிற்கு பின் அவருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 8 நபர்கள். தாய் மற்றும் ஆண் வாரிசுகளுக்கிடையே பாகம் பிரித்துக்கொள்ளப்பட்டது என்றால் சரிதான். எனது தந்தை 4ம் வாரிசு. ஆண் வாரிசுகளில் 2 ம் வாரிசு. வா.சா.ஆ 1 –ன் படி எனது தந்தைக்கு சி அட்டவணையில் உள்ள சொத்து கிடைக்கபெற்றது என்றால் சரிதான். வா.சா.ஆ 1 – 1985 – ல் ஏற்பட்ட காரணத்தினால், அது எனது தந்தையின் தனிப்பட்ட சொத்து என்ற காரணத்தினால், இந்து வாரிசுரிமை சட்டத்தின் படி நான் பாகம் கோர இயலாது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் 4 மற்றும் 5 இச்சொத்தை மூன்றாம் நபர்களுக்கு விற்பனை செய்த விவரம் தெரியுமா என்றால் இந்த வழக்கினை தாக்கல் செய்தபோது தெரியாது. பிரதிவாதிகள் 4 மற்றும் 5 அவர்களின் பதிலுரையில் குறிப்பிட்டுள்ளனர் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

7. அ அட்டவணை சொத்து கிரையம் பெற்ற ஆவணங்கள் மற்றும் பி அட்டவணை சொத்து கிரையம் பெற்ற ஆவணங்கள் எதுவும் இந்நீதிமனற்த்தில் நான் தாக்கல் செய்யவில்லை, ஆகையால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யபட வேண்டும் என்றால் சரியல்ல, ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். சரியான முத்திரை தீர்வை கட்டாத காரணத்தினால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யபட வேண்டும் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. இந்த வழக்கு எந்த முகாந்திரமும் இன்றியும், ஆவணங்களும் இல்லாமலும், தெளிவான விவரங்களும் கூறாமலும், சட்டபடியான உரிமையும் இன்றியும், கோரபட்டதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யபட வேண்டும் என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம். 12.51.p.m.**